**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 99/2022**

**வாதி தரப்பு சாட்சி–2 சங்கன் திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கி**ளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 23.10.2025 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை:**

1) இவ்வழக்கின் வாதிகளை எனக்கு எவ்வாறு தெரியும் என்றால், வாதிகள் எனக்கு மாமன், மைத்துனர் உறவுமுறை ஆகும். பிரதிவாதிகளை எவ்வாறு தெரியம் என்றால் அவர்களும் எனக்கு மாமன், மைத்துனர் உறவுமுறைதான். வாதிகள் எத்தனை அயிட்ட சொத்தை கிரையம் பெற்றனர் என்றால் 2 அயிட்ட சொத்தை வாங்கினர். அதன் சர்வே எண் தெரியுமா என்றால், கிழமேல் ரோட்டிற்கு தென்புறம் உள்ள நிலம் சர்வே எண் 936/9, வடபுறம் உள்ள நிலம் சர்வே எண் 931/11 ஆகும். சர்வே எண் 931/11 ல் எவ்வளவு இடம் உள்ளது என்றால் 30 செண்ட் நிலம் உள்ளது. மேற்படி சொத்தை யாரிடம் இருந்த கிரையம் பெற்றனர் என்றால் சங்கன் மகன் பொன்னன் மற்றும் மகள் வள்ளியம்மை ஆகியோரிடம் இருந்து 2003 ம் வருடம் கிரையம் பெற்றனர்.

2) மேற்படி 2 அயிட்ட சொத்துக்களும் அருகருகே உள்ளதா அல்லது தள்ளி உள்ளதா என்றால், ரோட்டிற்கு வடபுறம் ஒரு நிலமும், தென்புறம் ஒரு நிலமும் உள்ளது. தாவா சொத்து நஞ்சை நிலமா, அல்லது புஞ்சை நிலமா என்றால் புஞ்சை நிலம். வாதிகள் கிரையம் பெற்றது முதல் அவர்கள்தான் சாகுபடி செய்கிறார்களா என்றால் ஆமாம். 2022 ம் வருடம் வரை தாவா சொத்தை வாதிகள் தான் சாகுபடி செய்தார்களா என்றால் ஆமாம். எதற்காக வழக்கு தாக்கல் செய்தார்கள் என்றால் பிரதிவாதிகள் 2022 ம் வருடம் வாதிகளிடம் தகராறு செய்ததால் தாக்கல் செய்தனர். தகராறு செய்த விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா அல்லது வாதிகள் சொல்லி தெரியுமா என்றால், வாதிகள் சொல்லித்தான் தெரியும் 2003 ம் வருடம் வாதிகள் கிரையம் பெற்ற பின்பு, பிரதிவாதிகளுக்கும், வாதிகளுக்கும் இடையே 2022 ல் தான் முதன்முதலில் பிரச்சினை வந்ததா

என்றால் ஆமாம். தாவா சொத்துக்கள் சம்பந்தமாக சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் வழக்கு நிலுவையில் உள்ள விபரம் தெரியுமா என்றால் அதுபற்றி தெரியாது.

3) தாவா சொத்துக்கள் பொறுத்து நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு பொன்னன், வள்ளியம்மை ஆகியோரின் உரிமையானது உறுதி செய்யப்பட்டது என எனது முதல் சாட்சியத்தில் சொல்லியுள்ள நிலையில், எந்த நீதிமன்றத்தில் உறுதி செய்யப்பட்டது என்றால் குளித்தலை நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு உறுதி செய்யப்பட்டது. வழக்கு தாக்கல் செய்த விபரம் தெரியுமா என்றால் தெரியும். 2003 ல் வாதிகள் கிரையம் வாங்கிய போது நான் சாட்சி கையெழுத்து போட்டேனா என்றால் இல்லை. 2003 ல் பொன்னன், வள்ளியம்மையுடன் சேர்ந்து சங்கன் கிரையம் வாங்கியதாக சொல்லியுள்ளேன். சங்கன் என்பவர் யார் என்றால் பொன்னன், வள்ளியம்மையின் தகப்பனார். 2003 ல் சங்கன் உயிரோடு இருந்தாரா என்றால் இல்லை.

4) எனது முதல் சாட்சியத்தில் சங்கனும் சேர்ந்து கிரையம் செய்து கொடுத்ததாக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. பொன்னன், வள்ளியம்மை இருவரும்தான் கிரையம் செய்து கொடுத்தனர். தட்டச்சு பிழை காரணமாக அவ்வாறு இருக்கலாம். பொன்னனுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 7 பேர் வாரிசுகள், அவர்கள் பெயர் தெரியுமா என்றால் சரியாக தெரியவில்லை. மதுரை உயர்நீதிமன்றத்தில் வழக்கு நடந்துவரும் விபரமும், தாவா சொத்து பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்ற விபரமும் எனக்கு நன்கு தெரியும் என்றும், வாதிகள் எனது உறவினர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**